FORM NO. 124
JUDICIAL MAGISTRATE NO:II COURT– SATTUR
JUDGEMENT IN CALENDER CASE NO **380/2022** ON THE FILE OF
JUDICIAL MAGISTRATE NO:II, COURT – SATTUR

| | |
|---|---|
| Complaint | அரசுக்காக:– காவல் உதவி ஆய்வாளர், வெம்பக்கோட்டை காவல் நிலையம், குற்ற எண். 565/2020. |
| Accused | 1. திரு.சங்கிலிப்பாண்டியன், த/பெ.வெள்ளைச்சாமி.<br>2. திரு.அஜித்குமார், த/பெ.சங்கிலிப்பாண்டியன்.<br>3. திரு.வெள்ளைச்சாமி, (இறப்பு)<br>4. திரு.இன்பராஜ், த/பெ.சிவன். |
| Offence | <u>குற்றம்சாட்டப்பட்டது :–</u> 1வது எதிரி மீது பிரிவுகள் 294(b), 324 இ.த.ச ன் படியும், 2வது எதிரி மீது பிரிவு 324 இ.த.ச ன் படியும், 3வது எதிரி மீது பிரிவுகள் 294(b), 323 இ.த.ச ன் படியும், 4வது எதிரி மீது பிரிவுகள் 324 இ.த.ச ன் கீழ்,<br><u>குற்றச்சாட்டு வனையப்பட்டது:–</u> 1, 2 மற்றும் 4 எதிரிகள் மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 324ன் கீழ் |
| Finding | 3வது எதிரி இறந்துவிட்டதால் அவரை பொறுத்து வழக்கு அற்றுப்போய்விட்டது.<br>1, 2 மற்றும் 4 எதிரிகள் மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 324ன் கீழ் வனைந்துள்ள குற்றச்சாட்டுகளுக்கு அவர்கள் குற்றவாளிகள் இல்லை என்று முடிவு செய்து, அவர்கள் கு.வி.மு.ச. பிரிவு 248(1) இன் கீழ் விடுதலை செய்யப்படுகிறார்கள். |
| Sentence | எதிரிகள் விடுதலை செய்யப்படுகிறார்கள். |

| Description of the Accused | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| Sl. No. (1) | Name (2) | Father's Name/ Husband's Name (3) | Caste or race | Occupation (4) | Residence (5) | age (6) |
| 1. | சங்கிலிப்பாண்டியன் | வெள்ளைச்சாமி | இந்து | கூலி | கீழத்தெரு, கீழச்சத்திரம். | 44 |
| 2. | அஜித்குமார் | சங்கிலிப்பாண்டியன் | இந்து | கூலி | கீழத்தெரு, கீழச்சத்திரம். | 20 |
| 3. | வெள்ளைச்சாமி | வல்லான் | இந்து | கூலி | கீழச்சத்திரம் | 69 |
| 4. | இன்பராஜ் | சிவன் | இந்து | கூலி | மலையடிப்பட்டி, ராஜபாளையம். | 24 |

| Date of | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| Occurrence (7) | Complaint (8) | Apprehension of appearance (9) | Release on Bail (10) | Commencement of trail (12) | Close of Trial (13) | Sentence or Order (14) | Explanation of delay (16) |
| 01.08.2020 | 02.08.2020 | A1, A2, A3, A4 –18.08.2020 | A1, A2, A3, A4 –18.08.2020 | 17.03.2023 | 06.03.2026 | 12.03.2026 | |

குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்த நாள் :– 01.10.2020
குற்ற இறுதி அறிக்கை கோப்புக்கு எடுத்த நாள்:– 15.09.2022
<u>இதன் நகல்</u> :– மாண்புமிகு தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் ஸ்ரீவில்லிபுத்தூர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

S VARATHARAJAN
Digitally signed by S VARATHARAJAN
Date: 2026.03.12 18:20:33 +0530

Judicial Magistrate, No.II Sattur

**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, சாத்தூர்**
**முன்னிலை : திரு. சா. வரதராஜன், B.A.,B.L.,**
**நீதித்துறை நடுவர் எண்.2, சாத்தூர்**
2026 ஆம் ஆண்டு, மார்ச் மாதம் 12 ஆம் நாள் வியாழக்கிழமை
ஆண்டு பட்டிகை வழக்கு எண்380/2022
*****

| | | |
|---|---|---|
| 1. | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்றத்தின் குற்ற எண். (Name of the Police Station and Crime number of the Offence) | அரசுக்காக,காவல் உதவி ஆய்வாளர், வெம்பக்கோட்டை காவல் நிலையம், குற்ற எண். 565/2020. |
| 2. | எதிரிகளின் பெயர் (Name) | 1. திரு.சங்கிலிப்பாண்டியன், த/பெ.வெள்ளைச்சாமி, கீழத்தெரு, கீழச்சத்திரம்.<br><br>2. திரு.அஜித்குமார், த/பெ.சங்கிலிப்பாண்டியன், கீழத்தெரு, கீழச்சத்திரம்.<br><br>3. திரு.வெள்ளைச்சாமி, (இறப்பு) த/பெ.வல்லான், கீழச்சத்திரம்.<br><br>4. திரு.இன்பராஜ், த/பெ.சிவன், மலையடிப்பட்டி, ராஜபாளையம். |
| 3. | எதிரிகளின் தந்தை பெயர் (Father's Name) | |
| 4. | எதிரிகளின் தொழில் (Occupation) | |
| 5. | எதிரிகளின் முகவரி (Residence) | |
| 6. | எதிரிகளின் வயது (Age) | |
| 7. | குற்ற நிகழ்வு நாள் (Occurrence) | 01.08.2020 |
| 8. | புகார் தேதி (Complaint) | 02.08.2020 |
| 9. | எதிரி கைது செய்யப்பட்ட தேதி (Apprehension) | A1, A2, A3, A4 –18.08.2020 |
| 10. | எதிரி பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் | A1, A2, A3, A4 –18.08.2020 |
| 11. | Commitment | |
| 12. | விசாரணை ஆரம்பிக்கப்பட்ட தேதி (Commencement of Trial) | 17.03.2023 |
| 13. | விசாரணை முடிக்கப்பட்ட தேதி (Closure of Trial) | 06.03.2026 |
| 14. | தண்டனை அல்லது உத்தரவு (Sentence or Order) | எதிரிகள் விடுதலை செய்யப்படுகிறார்கள். |
| 15. | தீர்ப்பின் நகல் வழங்குதல் அல்லது குற்றம் சாட்டப்பட்டவர் குறித்த முடிவு | 1) 3 வது எதிரி இறந்துவிட்டதால் அவரை பொறுத்து வழக்கு அற்றுப்போய்விட்டது.<br>2) 1, 2 மற்றும் 4 எதிரிகள் மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 324 ன் கீழ் வனைந்துள்ள குற்றச்சாட்டுகளுக்கு அவர்கள் குற்றவாளிகள் இல்லை என்று முடிவு செய்து, அவர்கள் கு.வி.மு.ச. பிரிவு 248(1) இன் கீழ் விடுதலை செய்யப்படுகிறார்கள். |
| 16. | காலதாமதத்திற்கான காரணம் (Explanation of Delay) | சாட்சிகளை முன்னிலைப்படுத்துவதில் காலதாமதம். |



S VARATHARAJAN Digitally signed by S VARATHARAJAN Date: 2026.03.12 18:20:44 +0530

இவ்வழக்கானது என் முன்பு 06.03.2026 அன்று இறுதி விசாரணைக்காக வந்த போது, எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.D.பழனிக்குமார், B.A., B.L., அவர்கள் முன்னிலையாகியும், அரசு தரப்பில் குற்றவியல் வழக்கறிஞர் நிலை–2 அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதத்தை கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலித்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்த வந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்....

**<u>தீர்ப்புரை</u>**

1. **<u>குற்றச்சாட்டு</u> :–**

1.1. 01.08.2020ம் தேதி மாலை 04.00 மணிக்கு நிகழ்நிலை புகார்தாரர் நடுச்சத்திரத்தைச் சேர்ந்த ஆறுமுகம் என்பவர் வீட்டின் முன்பு பேசிக் கொண்டிருந்தபோது 1வது எதிரி சங்கிலிப்பாண்டியன், 2வது எதிரி அஜித்குமார், 3வது எதிரி வெள்ளைச்சாமி, 4வது எதிரி இன்பராஜ் ஆகிய நால்வரும் சேர்ந்து அங்கு வந்துள்ளனர். 1வது எதிரி சங்ககிலிப்பாண்டியன் மற்றும் 3வது எதிரி வெள்ளைச்சாமி ஆகிய எதிரிகள் சேர்ந்து நிகழ்நிலை புகார்தாரரை பொது இடத்தில் வைத்து "ஏண்டா தேவிடியா மகனே எங்கள பத்தி என்னடா சொன்ன" என்று அசிங்கமாக பேசியுள்ளார்கள். 1வது எதிரி சங்கிலிப்பாண்டியன் மற்றும் 2வது எதிரி அஜித்குமார் நிகழ்நிலை புகார்தாரரை அங்கு கிடந்த விறகு கட்டைகளை வைத்து அடித்துள்ளார்கள். 3வது எதிரி வெள்ளைச்சாமி மற்றும் 4வது எதிரி இன்பராஜ் நிகழ்நிலை புகார்தாரரை கையால் அடித்து கீழே தள்ளயும் 4வது எதிரி இன்பராஜ் அங்கு கிடந்த செங்கல்களை எடுத்து நிகழ்நிலை புகார்தாரரின் காலில் அடித்து சாதாரண காயத்தை ஏற்படுத்திய குற்றத்திற்காக 1வது எதிரி மீது பிரிவுகள் 294(b), 324 இ.த.ச ன் படியும்,2வது எதிரி மீது பிரிவு 324 இ.த.ச ன் படியும், 3வது எதிரி மீது பிரிவுகள் 294(b), 323 இ.த.ச ன் படியும், 4வது எதிரி மீது பிரிவுகள் 324 இ.த.ச ன் கீழ் கீழான குற்றங்களுக்கு இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **<u>கு.வி.மு.ச பிரிவு 207 ன் கீழ் நகல்</u> :–**

இவ்வழக்கில், எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜரானவுடன் அரசு தரப்பில் சமர்பிக்கப்பட்ட ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச பிரிவு 207– இன் கீழ் அவர்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டது.

3. **<u>கு.வி.மு.ச பிரிவு 239 மற்றும் 240 ன் கீழ் விசாரணை</u> :–**

3.1. எதிரிகளுக்கு போதுமான கால அவகாசம் கொடுத்த பிறகு, அவர்கள் மீது



S VARATHARAJAN Digitally signed by S VARATHARAJAN Date: 2026.03.12 18:20:52 +0530

தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்ற இறுதி அறிக்கை பற்றி கேட்ட போது, அவர்கள் பொய் வழக்கு என்றும், குற்றவாளி இல்லை என்றும் கூறினார்கள். இருதரப்பிலும் கேட்கப்பட்டு, வழக்கு கோப்புகளை ஆய்வு செய்த போது, 1, 2 மற்றும் 4 எதிரிகள் மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 324ன் கீழ் குற்றச்சாட்டுக்கள் வனைய போதுமான முகத்தோற்ற சான்றுகள் இருந்ததால், எதிரிகள் மீது அதே பிரிவுகளின் கீழ் குற்றச்சாட்டுகள் வனைந்து, குற்ற சாராம்ச சங்கதிகள் குறித்து அவர்களிடம் விளக்கி கூறிய போது, எதிரிகள் பொய் வழக்கு என்றும், வழக்கு விசாரணை செய்யப்பட வேண்டும் என்றும் கூறினார்கள். ஆகையால் இவ்வழக்கு விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

4. <u>அரசு தரப்பு சாட்சிகள்</u> :–

பட்டியல் சாட்சிகளில் இருந்து ஒரு நபரும், கூடுதல் சாட்சியாக சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.காளிராஜ் என்பவரும் அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆக அரசு தரப்பில் விசாரணை செய்யப்பட்டுள்ளார்கள். அவர்கள் மூலம் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.9 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

5. <u>அரசு தரப்பு சாட்சியங்களிலிருந்து தெரியவரும் அரசு தரப்பு வழக்கு</u> :–

5.1. 01.08.2020–ஆம் தேதி மாலை 4.00 மணி அளவில், அ.சா.1 – ஈஸ்வரன் ஆறுமுகம் வீட்டின் அருகே அவரிடம் பேசிக்கொண்டிருந்தபோது, அங்கு எதிரிகளான சங்கிலிபாண்டி, அஜித்குமார், வெள்ளைச்சாமி மற்றும் இன்பராஜ் ஆகியோர் வந்தார்கள். அவர்களில் சங்கிலிபாண்டியனும், வெள்ளைச்சாமியும் ஈஸ்வரனைப் பார்த்து, "ஏன்டா தேவிடியா மகனே, எங்களைப் பற்றி என்னடா சொன்னாய்?" என்று அசிங்கமாகப் பேசினார்கள். அப்பொழுது, சங்கிலிபாண்டியும் அஜித்குமாரும் அங்குக் கிடந்த விறகுக்கட்டைகளை எடுத்து அ.சா.1 – ஈஸ்வரனை அடித்தார்கள். வெள்ளைச்சாமியும் இன்பராஜும் தங்கள் கையால் அ.சா.1 – ஈஸ்வரனை அடித்துக் கீழே தள்ளினார்கள். இன்பராஜ் அங்குக் கிடந்த செங்கல்லை எடுத்து அ.சா.1 – ஈஸ்வரனின் காலில் அடித்தார். இச்சம்பவத்தில் அ.சா.1 – ஈஸ்வரனுக்கு வலது முழங்காலிலும், மேல் உதட்டிலும் வீக்கக் காயங்கள் ஏற்பட்டன.

5.2. மேற்படி காயத்திற்குச் சிகிச்சை பெறச் சாத்தூர் அரசு மருத்துவமனைக்கும், அங்கிருந்து மேல் சிகிச்சைக்காகச் செந்தில் தனியார் மருத்துவமனைக்கும் அ.சா.1 – ஈஸ்வரன் சென்றார். அங்கு அவர் உள்நோயாளியாகச் சிகிச்சையில் இருந்தபோது, வழக்கு சம்பந்தமாக விசாரிக்கச் சென்ற உதவி ஆய்வாளர் சதீஷ்குமாரிடம், 02.08.2020–ஆம் தேதி ஈஸ்வரன் அ.சா.ஆ.3 – புகார் மனுவைக் கொடுத்தார். அதன் அடிப்படையில்



S VARATHARAJAN Digitally signed by S VARATHARAJAN Date: 2026.03.12 18:21:00 +0530

இருக்கன்குடி காவல் நிலையக் குற்ற எண் 565/2020–ன் கீழ், இந்தியத் தண்டனைச் சட்டப் பிரிவுகள் 294(b), 323, 324 ஆகிய குற்றங்களுக்காக அ.சா.ஆ.4 – முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது.

5.3. வழக்கைப் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட உதவி ஆய்வாளர் சதீஷ்குமார், மாலை 6:15 மணிக்குச் சம்பவ இடத்திற்குச் சென்று, சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தையும் அதன் சுற்றுப்புறங்களையும் பார்வையிட்டு, அ.சா.ஆ.5 – பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.6 – மாதிரி வரைபடம் தயாரித்தார். அவர் சாட்சிகளைத் தனித்தனியாக விசாரித்து அவர்களின் வாக்குமூலங்களைப் பதிவு செய்தார். அ.சா.1 – ஈஸ்வரனுக்குச் சிகிச்சை அளித்த மருத்துவர்கள் செல்வகுமார், நிரஞ்சனி மற்றும் வேலுச்சாமி ஆகியோரைத் தனித்தனியாக விசாரித்து, அவர்களிடமிருந்து விபத்து பதிவேடு மற்றும் காயச் சான்றிதழ்களை (அ.சா.ஆ.7, 8 மற்றும் 9) பெற்று, அவர்களின் வாக்குமூலங்களையும் பதிவு செய்தார்.

5.4. உதவி ஆய்வாளர் சதீஷ்குமார் தனது புலன் விசாரணையில் வழக்கு சம்பவம் உண்மை என்று தெரிய வந்ததால், எதிரிகள் மீது மேற்சொன்ன அதே குற்றங்களுக்காக இறுதி அறிக்கை தாக்கல் செய்தார்.

6. <u>கு.வி.மு.ச பிரிவு 313 (1)(ஆ) கீழ் விசாரணை</u> :–

மேற்கண்ட அரசு தரப்பு சாட்சியங்களில் இருந்து எதிரிகளுக்கு பாதகமாக தோன்றக்கூடிய சாட்சியங்களையும், சூழ்நிலைகளையும் கு.வி.மு.ச பிரிவு 313 (1)(ஆ) இன் கீழ் தொகுத்து, அவரிடம் விளக்கி கேட்ட போது, அவர்கள் பொய் சாட்சி என்றும், பொய் வழக்கு என்றும் மறுத்தார்கள். மேலும், எதிரிகள் தரப்பில் விசாரணை செய்ய சாட்சிகள் இல்லை என்று கூறினார்கள்.

7. <u>இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை</u>:–

1, 2 மற்றும் 4 எதிரிகள் மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 324 ன் கீழ் வனைந்துள்ள குற்றச்சாட்டுக்கள் நியாயமான சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு அரசு தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதா?

8. <u>சாட்சியங்கள் மதிப்பீடு</u> :–

8.1. இந்த வழக்கு விசாரணையின் போது மூன்றாவது எதிரியான வெள்ளைச்சாமி இறந்துவிட்டதால், அவரைப் பொறுத்தவரை வழக்கின் மேல்நடவடிக்கை முடிவுற்று (Abated) போனது.

8.2. இந்த வழக்கில் காயம்பட்ட நபரும், புகார்தாரருமான அ.சா.1 – ஈஸ்வரன்



S VARATHARAJAN Digitally signed by S VARATHARAJAN Date: 2026.03.12 18:21:07 +0530

அரசு தரப்பில் ஒன்றாவது சாட்சியாக (PW1) விசாரணை செய்யப்பட்டுள்ளார். அவருடைய சாட்சியத்தில், எதிரிகள் தன்னுடைய அண்ணன் முறையிலான உறவினர்கள் என்றும், சுமார் ஆறு ஆண்டுகளுக்கு முன்பு மாலை 4 மணிக்கு ஆறுமுகம் என்பவரின் வீட்டு முன்பாக அடையாளம் தெரியாத நபர்கள் கூட்டமாக இருந்தார்கள் என்றும், அப்பொழுது ஏற்பட்ட தள்ளுமுள்ளுவில் தனக்குக் காயம் ஏற்பட்டது என்றும் கூறியுள்ளார்.

8.3. தன்னைத் தாக்கிய நபர் யார் என்று தனக்குத் தெரியாது என்றும், அந்தச் சம்பவத்திற்கும் எதிரிகளுக்கும் எந்தச் சம்பந்தமும் கிடையாது என்றும் அவர் பிறழ் சாட்சியம் (Hostile witness) அளித்துள்ளார். இந்த வழக்கில் கொடுக்கப்பட்டுள்ள அ.சா.ஆ.3 – புகார் மனுவில் உள்ள கையொப்பம் தன்னுடையது என்று ஈஸ்வரன் ஒப்புக்கொண்டுள்ள போதிலும், போலீசார் அவரிடம் எழுதாத வெற்றுத் தாளில் கையொப்பம் பெற்றார்கள் என்றும், அதில் எழுதப்பட்டுள்ள விவரங்கள் தனக்குத் தெரியாது என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

8.4. இந்த வழக்கில் அ.சா.1 கொடுத்ததாக உள்ள புகாருக்கும், அதன் அடிப்படையில் பதிவு செய்யப்பட்டுள்ள அரசு தரப்பு வழக்கிற்கும் முரணான அவர் சாட்சியம் அளித்ததால் அவரை அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக்கி, குறுக்கு விசாரணை செய்த பொழுதிலும், அவரிடமிருந்து அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக எவ்விதமான சாட்சியமும் பெறவில்லை.

8.5. மேலும், அ.சா.ஆ.3 – புகாரில் உள்ள கையெழுத்து (அ.சா.ஆ.1) தன்னுடையது என்று அ.சா.1 ஒப்புக்கொண்ட போதிலும், அதில் எழுதியுள்ள வாசகங்களை உறுதிபடுத்த சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை. ஆகையால், இந்த வழக்கில் கொடுக்கப்பட்டுள்ளதாக உள்ள புகார் அ.சா.1 ல் கொடுக்கப்பட்டதா? என்பதும் சந்தேகம் கொள்ளும் வகையில் அமைகிறது. ஆவணத்தில் உள்ள கையொப்பத்தை நிரூபிப்பது வேறு, அதன் உள்ளடக்கத்தை நிரூபிப்பது வேறு என்பதால், அ.சா.1 ன் சாட்சியம் மூலம் அ.சா.ஆ.3 – புகார் அவரால் கொடுக்கப்பட்டது என்று நிரூபிக்கப்படவில்லை.

8.6. தவிர, அ.சா.1 தற்போது எதிரிகளுடன் சமாதானமாகி விட்டதாகவும், சமாதானமாக செல்ல எதிரிகள் அவரை மிரட்டவோ, கட்டாயப்படுத்தவோ இல்லை என்றும் சாட்சியமளித்துள்ளதால், அரசு தரப்பில் இதர சாட்சிகள் விலக்கிக்கொள்ளப்பட்டு கூடுதல் சாட்சியாக சிறப்பு சார்வு ஆய்வாளர் திரு.காளிராஜ் என்பவர் அ.சா.2 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார். அவருடைய சாட்சியத்தை தவிர இந்த வழக்கில் எதிரிகளுக்கு எதிராக வேறு சாட்சியம் எதுவும் அரசு தரப்பில்



S VARATHARAJAN Digitally signed by S VARATHARAJAN Date: 2026.03.12 18:21:13 +0530

முன்னிலைப்படுத்தவில்லை. இந்த சூழ்நிலையில், புலன்விசாரணை கோப்புகளை பார்த்து சாட்சியமளித்துள்ள உதவி ஆய்வாளரின் சாட்சியம் மட்டுமே எதிரிகளை குற்றவாளி என்று முடிவு செய்ய போதுமானதல்ல.

8.7. இதன் மேலே பரிசீலனை செய்யப்பட்ட அரசு தரப்பு சாட்சியங்களின் ஒட்டுமொத்த தொகுப்பாக, அரசு தரப்பு வழக்கு நியாயமான சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்க தவறியுள்ளது என்று இந்த நீதிமன்றம் கருதி, இந்த வழக்கில் எதிரிகளுக்கு சந்தேகத்தின் பலன் கிடைக்கக்கூடியது என்று முடிவு செய்கிறது.

9. **முடிவு:-**

9.1. 3 வது எதிரி இறந்துவிட்டதால் அவரை பொறுத்து வழக்கு அற்றுப்போய்விட்டது.

9.2. 1, 2 மற்றும் 4 எதிரிகள் மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 324 ன் கீழ் வனைந்துள்ள குற்றச்சாட்டுகளுக்கு அவர்கள் குற்றவாளிகள் இல்லை என்று முடிவு செய்து, அவர்கள் கு.வி.மு.ச. பிரிவு 248(1) இன் கீழ் விடுதலை செய்யப்படுகிறார்கள்.

9.3. இவ்வழக்கில் சான்று பொருட்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

9.4. இவ்வழக்கில் எதிரிகள் ஆஜராக எழுதிக் கொடுத்த பிணை ஆவணம் இரத்து செய்து உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை, என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, இன்று 12.03.2026 ஆம் தேதி திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்படுகிறது.

S VARATHARAJAN Digitally signed by S VARATHARAJAN Date: 2026.03.12 18:21:21 +0530

நீதித்துறை நடுவர் எண்.2,
சாத்தூர்

**பிற்சேர்க்கை**

**1. அரசு தரப்பு சாட்சிகள் :-**

| | |
|---|---|
| அ.சா.1 | திரு.ஈஸ்வரன் |
| அ.சா.2 | திரு.காளிராஜ் (சிறப்பு சார்பு ஆய்வாளர்) |

**2. அரசு தரப்பு சான்றாவணங்கள் :-**

| வரிசை எண் | தேதி | ஆவண விபரம் |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 02.08.2020 | புகார் மனு அ.சா.1 ன் கையொப்பம் |
| அ.சா.ஆ.2 | 23.02.2026 | சமாதான மனு |
| அ.சா.ஆ.3 | 02.08.2020 | புகார் மனு |
| அ.சா.ஆ.4 | 02.08.2020 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.5 | 02.08.2020 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.6 | 02.08.2020 | மாதிரி வரைப்படம் |
| அ.சா.ஆ.7 | 30.09.2020 | அ.சா.1 க்கு சிகிச்சை அளித்த சாத்தூர் ஆரோ ஆர்த்தோ கிளினிக் மருத்துவரிடமிருந்து பெற்ற காயச்சான்று |



S VARATHARAJAN Digitally signed by S VARATHARAJAN Date: 2026.03.12 18:21:26 +0530

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.8 | 30.09.2020 | அ.சா.1 க்கு மேல் சிகிச்சை அளித்த சாத்தூர் செந்தில் மருத்துவமனை மருத்துவரிடமிருந்து பெற்ற காயச்சான்று |
| அ.சா.ஆ.9 | 01.08.2020 | விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று |

**3. அரசு தரப்பு சான்று பொருள்** :–இல்லை.

**4. எதிரி தரப்பு சாட்சிகள்** :– இல்லை

**5. எதிரி தரப்பு சான்றாவணங்கள்** :– இல்லை

**6. எதிரி தரப்பு சான்று பொருட்கள்** :– இல்லை

S VARATHARAJAN Digitally signed by S VARATHARAJAN Date: 2026.03.12 18:21:32 +0530

நீதித்துறை நடுவர் எண்.II,
சாத்தூர்

**குறிப்பு** :–

1. விசாரணை காலத்தில் எதிரிகள் பிணையில் இருந்தார்கள்.
2. சாட்சிகள் 3 வாய்தாக்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
3. தீர்ப்பு விபரம் காவல் துறைக்கு தெரிவிக்கப்பட்டது.